**அபி வெனுவென் அபி நிதியம் - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

அபி வெனுவென் அபி நிதியத்தின் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின், கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தெரியும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது இந்த அறிக்கையில் அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். முகாமைத்துவம் நிதியத்தைக் கணக்கொழிப்பதற்குக் கருதினால் அல்லது மாற்றீடு இல்லாவிடின் செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் குறித்த விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு அவ்வாளுகைக்குட்பட்ட தொடர்புடைய தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலநேரத்திலான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் அவசியமாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் தாக்கமளிப்பதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்து கொண்ட போதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக அபிப்பிராயத்தை வெளியிடக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் சரியான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினதும் நியாயபூர்வத் தன்மையை மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டுள்ளனவா என்பதும் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணப்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் ஆளுநர் சபையால் வழங்கப்பட்ட ஏதாவதொரு எழுத்துமூலச் சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான விதத்தில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகளைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களில் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் கணக்கிணக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவிலான ‘‘சிறந்தவாறு திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டுக் கட்டமைப்பை நிறுவனம் நடைமுறைப்படுத்துவது அவசியமானதாகும்.

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியன

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொலைக்கோபுர வருமானம் ரூபா 24,140,263 ஆகும். இதில், ரூபா 3,093,853 | தொடர்புடைய தொலைபேசி நிறுவனத்திடமிருந்து ரூபா 21,526,849 தொகையானது 2020 | உடன்படிக்கைப் பிரகாரம் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்ந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. | ஆம் ஆண்டின்போது அறவிடப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரணஜயபுர வீடமைப்புத் திட்டத்தின் 667 குடியிருப்பாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த தவணைப் பண நிலுவை ரூபா 21,028,796 ஆகும். அதில் ஓராண்டிற்கு மேற்பட்ட தவணைப்பண நிலுவை ரூபா 5,956,000 ஆகும். இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட தவணைப்பண நிலுவை ரூபா 6,075,700 ஆகும். | நெடுங்கால நிலுவையை அறவிடுவது சம்பந்தமாக ஆளுநர் சபைக்கு அறிவித்து ஆலோசனையைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உடன்படிக்கைப் பிரகாரம் நிலுவையை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2008 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய அதிகாரச் சட்டத்தின் 11(6) ஆம் பிரிவு | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நிதியத்தின் நிதிக் கூற்றுக்களையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையையும் நிதிய ஆரம்பத்திலிருந்து 2018 வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலத்தின் போது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | அதிகாரச் சட்டத்தின் 11(6) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் பொருட் கணிப்புச் சபை அறிக்கை 2020 ஆகஸ்ட் 31 வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | COVID 19 வைரஸ் காரணமாக குறித்த வேலைகள் நடைபெறுவது தாமதமாகியது. | சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியமானது நிதித் தேவைகளுக்கான முன்னோடித் திட்டத்தைத் தயாரித்திராததால் 2019 ஆம் ஆண்டில் திருத்தத்திற்குள்ளான செயற்பாடுகளின் பொருட்டான நிதித் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முதிர்ச்சி அடைவதற்கு முன்னரே 2 நிலையான வைப்புகள் திருப்பிப் பெறப்பட்டிருந்தன. இதனால் நிதியம் இழந்த வட்டி ரூபா 7,217,101 ஆகும். | 2019 ஆம் ஆண்டில் மேலதிகமாக பூரண மற்றும் அரைப்பங்கு நிறைவேறியிருந்த 325 வீடுகளை நிர்மாணிப்பதற்குக் கொள்வனவு செய்ய வேண்டியேற்பட்டதால் முதிர்ச்சி அடைவதற்கு முன்னரே நிலையான வைப்புத் தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. | முன்கூட்டியே நிதிக்கான தேவை திட்டமிடப்பட்டு அதற்கமைய செலவுகள் திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) | தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கியிருந்த அன்னம் பொருத்தப்பட்ட படகுச் செயற்திட்ட உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்காததால் 2019 மே தொடக்கம் டிசெம்பர் வரை அச்சேவை தொடர்பான நடவடிக்கைகள் நிதியத்தால் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக, மீளாய்வாண்டில் பெறப்பட்ட வருமானம் ரூபா 676,497 ஆகும். அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 27 சதவீத குறைவாகும் என அவதானிக்கப்பட்டது. | 2020.01.10 முதல் மீண்டும் ஆரம்பமாகி நிதியத்திற்கு 30 சதவீதமும் குறித்த நிறுவனத்திற்கு 70 சதவீதமும் எனும் அடிப்படையில் நடைபெறுகின்றது. | உடன்படிக்கைப் பிரகாரம் மாதாந்த வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ரணவிரு வீட்டு நலன்கள் வழங்கப்படுகையில் விழாவுக்கு ரூபா 2,794,825, பணிகளை புதினப் பத்திரிகைகளில் விளம்பரம் மூலம் பிரசாரம் செய்வதற்கு ரூபா 860,338 என மீளாய்வாண்டின்போது நிதியத்தால் செலவிடப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அதிகாரச் சட்டத்தின் நோக்கங்களுக்கு அமைய செலவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டினது செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 169,350,051 பற்றாக்குறை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 101,988,572 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 67,361,479 நலிவு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டினது வருமானம் ரூபா 610,964 அதிகரித்தபோதும், செயற்திட்ட அபிவிருத்திச் செலவினம் ரூபா 60,789,291 மற்றும் செயற்திட்டச் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 5,308,899 என அதிகரிப்புக்குள்ளானமை இந்த நலிவுக்கு பிரதான காரணமாக அமைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 400 படை வீரர்களுக்கு அரைப்பங்கு வீடுகளுக்கான நலன்களை வழங்குவதானது பின்னர் 700 வீடுகள் வரை மீளாய்வு செய்யப்பட்டு ரூபா 499,895,970 நலனாக பணம் வழங்கப்பட்டிருந்தது. ஒரு அங்கத்தவருக்கு இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணைப் பணமும் 11 அங்கத்தவர்களுக்கு மூன்றாவது தவணைப் பணமும் மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்படவில்லை. | நலன்களைப் பெறும் சில போர்வீரர்களது வீட்டு நிர்மாண வேலை வினைத்திறன் அற்று இருப்பதால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் நிர்மாண வேலை பூர்த்தியாகவில்லை. | சிறந்த கண்காணிப்புடனும் தொடர் நடவடிக்கையுடனும் நிர்மாண வேலையைப் பூர்த்தி செய்யுமாறு நலன் பெறுநர்களை ஊக்குவிக்க வேண்டும். |
| (ஆ) | 2008 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் போர்ச் சேவை அங்கத்தவர்கள் நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெறுதல், அக்கடனை கொடுப்பனவு செய்வதற்கு உதவி அளித்தலின் பொருட்டு ஏற்பாடுகளைச் செய்தல், இராணுவ அங்கத்தவர் ஒருவர் மரணமடையும்போது அல்லது போரின்போது நிரந்தர ஊனமடையும்போது அல்லது காயமடையும் போது கடனைத் திருப்பிச் செலுத்துவதை சான்றுறுதிப்படுத்துவதற்கு | 25,000 க்கு மேற்பட்ட கோரிக்கையாளர்கள் இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளனர். எனினும், நடைபெற்றவாறுள்ள வீட்டுச் செயற்திட்டங்களுடன் உருவாகும் நிதி நெருக்கடி காரணமாக செய்ய முடியாதுள்ளது. | அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தை அமைத்த நோக்கம் மற்றும் எண்ணம் என்பவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| முன்மொழிவுகளைத் தயாரித்தல் போன்ற நோக்கங்கள் மீளாய்வாண்டிலும் நிறைவேறவில்லை. | | |
| (இ) 2018 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி அதிகாரச் சட்டத்தின் 23 ஆம் பிரிவில் உள்ளவாறு பொலிஸ் அங்கத்தவர்களும் படையினராகச் சுட்டிக் காட்டபோதும், மீளாய்வாண்டின் போதும் பொலிஸ் அங்கத்தவர்களுக்கு நிதியத்தின் நலன்கள் வழங்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டின்போது இலங்கை பொலிஸ் அங்கத்தவர்களுக்கும் நலன்களை வழங்குவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | அதிகாரச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16.2 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயலாற்றல் அறிக்கை 2020 யூலை 27 ஆந் திகதியன்று நிதியத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | செயலாற்றல் அறிக்கை 2020 யூலை 27 ஆந் திகதி கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. | அதிகாரச்சட்டத்தின் 16.2 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் தேவையான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைப் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.3 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் நிதியத்தின் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை. | எதிர்காலத்தில் வரவு, செலவுத் திட்டத்தை ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | வரவு, செலவுத் திட்டத்தை ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.4 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி அதிகாரச்சட்டம் மற்றும் சனாதிபதியின் செயலாளரது 2018 மார்ச் 16 ஆந் திகதிய பீஎஸ்/எஸ்பீ/எஸ்பீ/3/201 ஆம் சுற்றறிக்கைப் பிரகாரம் நிதியத்திற்குரிய நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் அந்த இலக்கை அளவிடுவதற்கான சுட்டு என்பன இனங்காணப்படவில்லை. | நிதியத்தின் செயற்திட்டங்கள் ஆரம்பத்திலிருந்தே வருடாந்தத் திட்டத்தின் பிரகாரம் அமுலாக்கப்பட்டதால் நிலைத்து நிற்கவல்ல அதிகாரச் சட்டத்திற்கேற்ப நோக்கத்தை அடைவதற்குத் தேவையான இலக்கை எய்தும் முன்னேற்றம் தொடர்பான சுட்டை உள்ளடக்கியிருக்கவில்லை. செயற்திட்டத்தின் எதிர்காலத் திட்டத்தை நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்திற்கமைய தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டம் மற்றும் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |